சின்னச் சின்னதாய்...

எஸ்.ஐ.யை மிரட்டியவர் கைது

● கோவில்பட்டி

வாகனச் சோதனையில் ஈடுபட்ட காவல் துறை உதவி ஆய்வாளரை பணி செய்யவிடாமல் தடுத்து, கொலை மிரட்டல் விடுத்த மினி பேருந்து நடத்துநரை போலீஸார் கைது செய்தனர்.

கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் பொன்ராஜ் தலைமையில் போலீஸார் நேற்று முன்தினம் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி விசாரணை செய்த போது, அவருடைய பேச்சு முன்னுக்குப்பின் முரணாக இருந்துள்ளது. அவரது வாகனத்தை சோதனையிட்ட போது, அதில் ஒன்றரை அடி நீளமுள்ள வாள் இருந்தது. அப்போது அந்த இளைஞர் வாளை எடுத்து, காவல் உதவி ஆய்வாளரை அவதூறாகப் பேசி பணி செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எஸ்.ஐ., பொன்ராஜ் அளித்த புகாரின் பேரில், வடக்கு புதுகிராமத்தைச் சேர்ந்த கஜேந்திரபூபதி மகன் மினி பேருந்து நடத்துநர் காளிமுத்துவை (21) போலீஸார் கைது செய்தனர்.

பெண்ணை தாக்கிய வழக்கில் 2 பேர் கைது

● கோவில்பட்டி

கோவில்பட்டி நடராஜபுரம் தெரு ராஜகோபால் காலனியைச் சேர்ந்தவர் ஞானபிரகாசம் (47). ஆட்டோ ஓட்டுநரான இவர் கடந்த 15–ம் தேதி இரவு சொக்கனூரணி சந்திப்பில் தனது ஆட்டோவில் அமர்ந்திருந்தார். அங்கு வந்த 3 பேர் ஞானபிரகாசத்தை அரிவாளால் வெட்டினர். இதை தடுக்க முயன்ற அவரது அண்ணன் மனைவி புனிதமேரியையும் அரிவாளால் தாக்கினர். காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக வீரவாஞ்சி நகரைச் சேர்ந்த சங்கிலிபாண்டி, வ.உ.சி. நகர் கார்த்திக் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர். பேச்சிமுத்து என்பவரை தேடி வருகின்றனர்.

முதலூர் ஊருணி பாலம் விரிவாக்கம்

● தூத்துக்குடி

சாத்தான்குளம் ஒன்றியம் முதலூர் ஊராட்சியில் உள்ள ஊருணி நிரம்பி, வைரவம் தருவைக்கு தண்ணீர் செல்லும் ஓடையின் குறுக்கே குறுகிய பாலம் உள்ளது.

பாலம் குறுகலாக இருப்பதால் மோட்டார் சைக்கிள் கூட செல்ல முடியாமல் மக்கள் சிரமத்தை சந்தித்து வந்தனர். கார் வந்து செல்லும் வகையில் பாலத்தை விரிவுபடுத்த வேண்டும் என, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதன்பேரில், நீர்வளத்துறை மூலம் ரூ.88 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் தடுப்புகள் அமைப்பதற்கு தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. இதற்கான பூமிபூஜையை முதலூர் ஊராட்சித் தலைவர் பொன் முருகன் தலைமை வகித்து, தொடங்கி வைத்தார். பொறியாளர் சசிகரன், முதலூர் வியாபாரிகள் சங்க செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மின்சாரம் தாக்கி மாணவர் மரணம்

● தூத்துக்குடி

தூத்துக்குடி தபால் தந்தி காலனி 10–வது தெருவைச் சேர்ந்த மணி மகன் முத்துசாமி என்ற சந்தோஷ் (19). இவர் தூத்துக்குடி பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து வந்தார். நேற்று முன்தினம் இரவு தனது நண்பர்களுடன் தபால் தந்திகாலனி 14–வது தெருவில், புதிதாக கட்டப்பட்டு வரும் ஒரு வீட்டின் மாடியில் நண்பர்களுடன் அமர்ந்து இருந்தார்.

அங்கிருந்த உயர் அழுத்த மின்கம்பி உரசியதில், மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்ட முத்துசாமி என்ற சந்தோஷ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்து போனார். சிப்காட் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு

● தூத்துக்குடி

ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம், சேதுக்குவாய்த்தான் ஊராட்சியில் ரூ.12.70 லட்சத்தில் ரேஷன் கடை, ரூ.4 லட்சம் செலவில் தகன மேடை, ரூ.6.70 லட்சம் செலவில் வேளாண் விளைபொருள் சேமிப்புக் கிடங்கு, ரூ.7.43 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைப் பணிகள் ஆகியவை நடந்து வருகின்றன.

இப்பணிகளை மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி ஆய்வு செய்தார். தொடர்ந்து, கோபாலபுரம் கிராமத்தில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையப் பணி, பெரியமுத்துவிளையில் ரூ.11.75 லட்சம் மதிப்பீட்டிலும், நாலுமாவடி ஊராட்சி வாலசுப்பிரமணியபுரத்தில் ரூ.67.75 லட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்படும் தார்சாலைப் பணிகளையும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

ஜெல்லி மீன்களால் அச்சுறுத்தல் இல்லை

மீன்வளத்துறை ஆய்வாளர் தகவல்

● தூத்துக்குடி

திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் காணப்படும் ஜெல்லி மீன்களால் பக்தர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இல்லை என மீன்வளத்துறை ஆய்வாளர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் கடந்த சில நாட்களாக ஜெல்லி மீன்கள் கரை ஒதுக்குகின்றன. கடலில் நீராடும் பக்தர்களை கடிப்பதாலோ அல்லது தொடுவதாலோ அலர்ஜி ஏற்பட்டு ஊறல் ஏற்படுகிறது. சில பக்தர்களுக்கு பலத்த காயம் ஏற்படுகிறது. இதுகுறித்து, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பக்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, மீன்வளத்துறை உதவி இயக்குநர் புஷ்ரா ஷபனம், ஆய்வாளர் சுப்பிரமணியன், பணியாளர் சிவராமகிருஷ்ணன் ஆகியோர் கோயில் கடற்கரையில் ஆய்வு செய்தனர். ஆய்வாளர் சுப்பிரமணியன் கூறியதாவது: ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் செஞ்சொறி மீன்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் அதிகம் காணப்படும். இது கொட்டும் தன்மையுடைய ஜெல்லி மீன்களாகும்.

ஆகையால் நீரில் இருக்கும் போதோ அல்லது கடற்கரை பகுதிகளில் கிடந்தாலோ அவற்றை கையினால் தொடக்கூடாது. அவற்றை அறியாமல் தொடுவதால் ஏற்படும் எரிச்சல் மற்றும் தீக்காயம் போல் ஏற்பட்ட காந்தலை குறைக்க, காயம் ஏற்பட்ட பகுதியில் வினிகரை தெளித்து குணம்பெறலாம். பின்னர், கேலமைன் அல்லது கேலடிரில் மருந்தை பயன்படுத்தினால், 24 மணி நேரத்துக்குள் காயம் சரியாகிவிடும். இந்த வகை மீன்களால் பெரிய அச்சுறுத்தல் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

திருச்செந்தூருக்கு சிறப்பு ரயில்கள்

● தூத்துக்குடி

வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு திருநெல்வேலி - திருச்செந்தூர் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு திருநெல்வேலி - திருச்செந்தூர் இடையே மே 22-ம் தேதி 2 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. திருநெல்வேலியில் சிறப்பு ரயில் (எண் 06857) காலை 6.40 மணிக்கு புறப்பட்டு, திருச்செந்தூருக்கு 8.15 மணிக்கு வந்தடையும். மறுமார்க்கமாக திருச்செந்தூரில் இருந்து (எண் 06858) காலை 9.15 மணிக்கு புறப்பட்டு திருநெல்வேலிக்கு 10.50 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் திருநெல்வேலியில் இருந்து காலை 11.25 மணிக்கு புறப்பட்டு திருச்செந்தூருக்கு மதியம் 1 மணிக்கு வந்தடையும். மறுமார்க்கமாக திருச்செந்தூரில் இருந்து மதியம் 1.30 மணிக்குப் புறப்பட்டு மாலை 3 மணிக்கு திருநெல்வேலிக்கு வந்தடையும்.

இந்த சிறப்பு ரயில்கள் பாளையங்கோட்டை, செய்துங்கநல்லூர், தாதன்குளம், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, நாசரேத், கச்சனாவிளை, குரும்பூர், ஆறுமுகநேரி, காயல்பட்டினம் உள்ளிட்ட இடங்களில் நின்று செல்லும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

9 மலை கிராமங்களில் மழைமானி

● விரைவில் அமைக்க நடவடிக்கை: குமரி ஆட்சியர்

● நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம் தர்மபுரம் வடக்கு வருவாய் கிராமம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட ஆளூர் 'பி' கிராம நிர்வாக அலுவலகம் அருகில் தானியங்கி மழைமானிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றை ஆட்சியர் ஸ்ரீதர் பார்வையிட்டார்.

பின்னர் அவர் கூறியதாவது: பேரிடர் காலங்களில் வானிலை மாற்றங்கள், மழையளவு, கடல் சீற்றம் போன்றவை வானிலைநிலையங்கள், பைரனோமீட்டர், வேளாண் சென்சார்கள், ரெயின் கேஜ் சென்சார்கள், காற்று உணரிகள், சுற்றுப்புற சென்சார்கள், கையடக்க சோதனையாளர், தரவு சேகரிப்பாளர், லோராவன் சென்சார்கள், லோராவன் நுழைவாயில் ஸ்மார்ட், பாசனம் துணைக் கருவிகள், ரெயின் கேஜ் சென்சார்கள் மூலம் கண்டறியப்படுகிறது.

தானியங்கி மழைமானியானது மழையை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் வானிலை கருவி. கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்துக்கு உட்பட்ட கன்னியாகுமரி வருவாய் ஆய்வாளர் விடுதி, தர்மபுரம்வடக்கு கிராம நிர்வாக அலுவலக கட்டிடம், சுசீந்திரம் – குலசேகரபுரம் கிராம நிர்வாக அலுவலகம் அருகில், நாகர்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் அருகில், தோவாளை வட்டத்துக்கு உட்பட்ட துணை சார்பதிவாளர் அலுவலகம், பூதப்பாண்டி – தோவாளை வட்டாட்சியர் அலுவலகம், தடிக்காரன்கோணம் நியாய விலைக்கடை, தோவாளை பொய்கை அணைப்பகுதி செண்பகராமன்புதூர் பகுதி, கல்குளம் வட்டத்துக்கு உட்பட்ட குளச்சல் 'பி' கிராம நிர்வாக அலுவலகம், ஆளூர் 'பி' கிராம நிர்வாக அலுவலகம் அருகில், கல்லுக்கூட்டம் பேரூராட்சி அலுவலகம், குமாரபுரம் அரசு புறம்போக்கு நிலம், பாலூர், முஞ்சிறை கிராம நிர்வாக அலுவலக கட்டிடங்கள், திருவட்டாறு வட்டத்துக்கு உட்பட்ட செருகோல் கிராம நிர்வாக அலுவலக கட்டிடம், தம்பக்கோடு 'பி' கிராம நிர்வாக அலுவலக கட்டிடம், விளவங்கோடு வட்டத்துக்கு உட்பட்ட அருமனை வருவாய் ஆய்வாளர் விடுதி அருகில், இடைக்கோடு பகுதியில் உள்ள தேவிக்கோடு அரசு நடுநிலைப்பள்ளி கட்டிடம் ஆகிய 18 இடங்களில் தானியங்கி மழைமானி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் குமரி மலை கிராமங்களான கீரிப்பாறை அரசு ரப்பர் கழக கட்டிடம், அழகிய பாண்டியபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட அசம்பு பகுதி மயிலார் அரசு ரப்பர் கழகம் அருகில், சிவலோகம் (சிற்றாறு 2) பொதுப்பணித்துறை அலுவலகம் உட்பட 9 இடங்களில் தானியங்கி மழைமானி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஆட்சியர் தெரிவித்தார்.

↑ குமரி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி மழைமானியை ஆட்சியர் ஸ்ரீதர் பார்வையிட்டார்.

ரேஷன் கடையில் திடீர் ஆய்வு

கன்னியாகுமரி மாவட்டம் வீராணசேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுங்கான்கடை நியாயவிலைக் கடையில் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் ஆய்வு மேற்கொண்டார்.

அத்தியாவசிய பொருட்கள் உடனுக்குடன் வழங்கப்படுகிறதா என, அங்கிருந்த மக்களிடம் ஆட்சியர் கேட்டறிந்தார். பொருட்கள் இருப்பு குறித்தும் ஆய்வு செய்தார்.

கல்குளம் வட்டாட்சியர் முருகன் உடனிருந்தார்.

ஆளுமைத்திறனை வளர்க்கும் பட்டப்படிப்பை தேர்வு செய்யுங்கள்

▶ உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் ஆட்சியர் அறிவுரை

● தூத்துக்குடி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளிடையே உயர் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், தூத்துக்குடி சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு அரசின் 'என் கல்லூரிக் கனவு' உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி பேசியதாவது:

பட்டப்படிப்பு படித்தால் மத்திய, மாநில அரசுபணிகள் மற்றும் வங்கிப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எழுதலாம். அரசு பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட அனைத்து படிப்புகளுக்கும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு இருக்கிறது. மாணவர்கள் தினசரி நாளிதழ் படித்து பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய ஆளுமைத்திறன் உள்ளிட்ட ஒட்டுமொத்த திறமையையும் வளர்க்கும் விதமாக கல்லூரியில் பட்டப் படிப்பை தேர்ந்தெடுக்க வேண்டும். தனியார் கல்லூரியில் படிப்பதற்கு வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. உயர்கல்வி பயில அரசு பல்வேறு வகைகளில் ஊக்கத்தொகை அளிக்கிறது. படிப்புக்குப் பின்னர் சுயதொழில் தொடங்க 35 சதவீதம் மானியத்தில் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. எனவே, மாணவ, மாணவிகள், அரசின் சலுகைகளை பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் (பொறுப்பு) விக்னேஷ்வரன், பல்வேறு துறை சார்ந்த கல்வியாளர்கள், வல்லுநர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

↑ தூத்துக்குடியில் நடந்த உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் ஆட்சியர் கோ.லட்சுமிபதி பேசினார்.

உப்பு விழிப்புணர்வு வாரம்

● தூத்துக்குடி

தூத்துக்குடியில் எம்பவர் இந்தியா சார்பில் உலக உப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டது.

எம்பவர் இந்தியா கவுரவ செயலாளர் ஆ.சங்கர் தலைமை வகித்து பேசுகையில், "இந்தியாவில் உப்பு உற்பத்தியில் முதலாவதாக குஜராத்தும், அதற்கு அடுத்தபடியாக தமிழகமும் விளங்குகிறது. தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் உப்பு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. மற்ற மாவட்டங்களை விட தூத்துக்குடி மாவட்டத்தில் விளையும் உப்பு தரமானது. உலக சுகாதார நிறுவனம் அன்றாடம் நாம் பயன்படுத்தும் உப்பின் அளவை கண்டிப்பாக குறைக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, நாம் உணவில் சேர்க்கும் உப்பின் விகிதத்தை 30 சதவீதம் குறைத்துக்கொள்ள வேண்டும் என மத்திய அரசும் தெரிவித்துள்ளது. உணவு பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதல்படி சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகளை உணவில் குறைக்க வேண்டும்," என்றார்.

வைகாசி விசாக திருவிழாவுக்காக

திருச்செந்தூரில் கூடுதல் வாகன நிறுத்துமிடம்

● தூத்துக்குடி

திருச்செந்தூர் வைகாசி விசாகத் திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் வசதிக்காக 5 இடங்களில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படுவதாக மாவட்ட எஸ்பி எல்.பாலாஜி சரவணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கோடை விடுமுறை மற்றும் மே 22-ம் தேதி வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு, லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

விழாவில் அதிகப்படியான வாகனங்கள் திருச்செந்தூருக்கு வரும் என்பதை உத்தேசித்து, மாவட்ட காவல்துறையின் அறிவுரையின் பேரில் இந்து சமய அறநிலையத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் தனியார் ஒருங்கிணைப்புடன் கூடுதல் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோயிலுக்கு மிக அருகாமையில் பக்தர்கள் வாகனங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் கோட்டாட்சியர் அலுவலகம் எதிரே நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுமார் 400 கனரக வாகனங்களும், திருச்செந்தூர் செந்தில் ஆண்டவர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சுமார் 500 கார் மற்றும் வேன்களும், நீதிமன்றத்துக்கு எதிரே தனியார் மற்றும் செந்தில்முருகன் அரசு மகளிர் மேல்நிலைபள்ளிக்கு சொந்தமான 6 ஏக்கர் இடத்தில் 1,300 வாகனங்களும், திருச்செந்தூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் எதிராக உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் சுமார் 700 வாகனங்களும், திருநெல்வேலி சாலையில அனைத்து வியாபாரிகள் சங்கம் அருகே உள்ள கோயிலுக்கு சொந்தமான 15 ஏக்கர் இடத்தில் சுமார் 2,500 வாகனங்களும் நிறுத்த இடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே, பக்தர்கள் இந்த வாகன நிறுத்தங்களை பயன்படுத்திக் கொள்ளலாம், என தெரிவித்துள்ளார்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கொரமங்களா 6வது ப்ளாக், கொரமங்களா, பெங்களூர்-560095.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [Rule 8(1)]

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (Second) Act, 2002 (Act 54 of 2002)-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான **கீழே கையொப்பமிட்ட உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் **13(12)** பிரிவு மற்றும் விதி **3**-ன் படி **கீழ்வரும் தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்பெற்ற நபர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8-ன்படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 15.05.2024 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**-க்கு வரவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும் மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தாரர்: **1.Mr.கண்ணன்.S,** S/o.சுடலை முத்து நாடார், **2.Mrs.கலைசெல்வி.T,** W/o.Mr.கண்ணன்.S, **இருவரது முகவரி,** எண்.1-203 A, காமராஜர் சாலை பில்லர்விளை, அகஸ்தீஸ்வரம், இராஜக்கமங்கலம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629502; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.02.2024; கடன் நிலுவைத்தொகை: 05.02.2024 அன்றுள்ளபடி ₹ 6,95,598/-** (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்) மற்றும் வட்டி.

அசையா சொத்து விபரம்: கன்னியாகுமரி பதிவு மாவட்டம், இராஜக்கமங்கலம் சார்-பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.10088, மறு சர்வே எண்.994/1 (சப்-டிவிஷன் படி மறு சர்வே எண்.994/1A), **பட்டா எண்.1823, நீண்டகரை "B" கிராமம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம்** என்னும் முகவரியில் **2.250 சென்ட் சொத்து** எல்லைகள்: கிழக்கு: வழிப்பாதை, மேற்கு: தங்ககண்ணு-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: செல்வவதி-க்கு சொந்தமான சொத்து, வடக்கு: வழிப்பாதை

மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது Mrs.T.கலைசெல்வி, W/o.Mr.கண்ணன்-க்கு சொந்தமானது. (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).

வ.எண்.2: கடன்தாரர்: **1.Mr.ராஜேஷ்.S,** S/o.Mr.செல்வராஜ், **2.Mrs.சுனிதா,** W/o.Mr.ராஜேஷ்.S, **இருவரது முகவரி,** எண்.3/162, மூப்புவிளை, மருதங்கோடு அஞ்சல், விளவங்கோடு, கன்னியாகுமரி, தமிழ்நாடு-629163; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 17.02.2024; கடன் நிலுவைத்தொகை:** 14.02.2024 **அன்றுள்ளபடி ₹ 21,33,051/-** (ரூபாய் இருபத்தொன்று லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐம்பத்தொன்று மட்டும்) மற்றும் வட்டி.

அசையா சொத்து விபரம்: கன்னியாகுமரி பதிவு மாவட்டம், மார்த்தாண்டம் ஜாயிண்ட் II சார்-பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, மறு சர்வே எண்.164/10, பழைய சர்வே எண்.2569, பட்டா எண்.6916, **மருதங்கோடு கிராமம், விளவங்கோடு தாலுகா என்னும் முகவரியில் 3.750 சென்ட் சொத்து,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: வழிப்பாதை, தெற்கு: செல்லசாமி-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: ராசல் ராஜ், தாமோதரன் ஆகியோருக்கு சொந்தமான சொத்து, வடக்கு: வழிப்பாதை.

மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.ராஜேஷ்-க்கு சொந்தமானது. (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).

தேதி: 15.05.2024

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சள்மேட்டு காலனி, நாகு நகர், மதுரை-625016

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	20.02.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
166021009000002 1. Mr.நைனா முகமது M N 2. Mrs. ஜெனிபர் பானு N	(i) 04.10.2021 & 30.09.2021 அன்றுள்ளபடி ரூ.28,13,304/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 21.09.2022 & நேரடியான சுவாதீனம் 05.08.2023	ரூ.43,84,135/- (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று முப்பத்து ஐந்து மட்டும்)	₹ 21,10,000/- (ரூபாய் இருபத்து ஒன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	₹ 2,10,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)

சொத்து விவரம் : பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், மேலபாளையம் சார் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.10, புதிய வார்டு எண்.9, புதிய திருநெல்வேலி மாநகராட்சி 37வது வார்டு, **பழைய மேதாமார்பாளையம் வடக்கு தெரு, தற்போது மேதாமார்பாளையம் 2வது தெரு, கீழவீரராகவபுரம் கிராமம், மேலபாளையம் நகராட்சி, பாளையங்கோட்டை தாலுகா,** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 9.625 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 44 அடி, மொத்தம் **423.50 சதுர அடி, அதற்கு சமமாக 39.34 சதுர மீட்டர் நிலம் இதில் கட்டப்பட்டுள்ள RCC வீட்டு கட்டிடம்,** கதவு எண்.25A, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.88186, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.89764, புதிய சொத்து வரி மதிப்பீட்டு எண்.01871, மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் மற்ற வசதிகள். பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: N.பீர் மொய்தீன்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: சேகுமீராம்மாள்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 3 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 69 அடி, மொத்தம் **207 சதுர அடி, அதற்கு சமமாக 19.23 சதுர மீட்டர் வழிப்பாதை,** அதனுடன் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து உபகரணங்கள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: சையது முகமது-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: 1வது ஷெட்டியூல் சொத்தில் முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: மேதாமார்பாளையம் 2வது தெரு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 12.06.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி:	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
11.06.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	10.06.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த் - Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob. No. 98138 87931**)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 19.05.2024
இடம்: பெங்களூர்

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

பிறசேவை பகுதி

சமையல்

இயற்கை முறையில் அடுப்பில்லா சமையல் Ph. 9994037121

மணப்பந்தல்

திருமணசேவை மையம்

21-55 வயதுள்ள 10/+2/ Dip, Deg படித்த சுத்த/ராகு /கேது, செவ்வாய் தோஷமுள்ள பெண்களுக்கு முதல் / மறுமணம் புரிய மணமகன் தேவை. 86085 99444

மணமகன் தேவை

தமிழ்

Hindu Maruthuvar born May 95 software engineer seeks suitable groom inland/abroad.Contact 9025690557

மற்றவை

Urdu Muslim, Good looking, Fair, 22/166, M.com seeks educated & settled groom. Ct:9442600462, showhath@gmail.com

மணமகள் தேவை

தமிழ்

NRI Divorced Hindu Pillai BE M.S,81 born, poosam 5'7, looking for suitable bride.Subsects no bar. Ct.9894576770.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).